DINAMALAR-05-SEP-2017

# வைவகை ஆற்றை கடந்த போது வேதனை!

மதுரை, செப். 5–

''மதுரையில், வைகை ஆற்றை கடந்த போது, மனம் வேதனை அடைந்தது. அவ்வளவு அசுத்தமாக இருக்கிறது. அமைச்சர், கலெக்டர் என அடுத்தவரை கை காட்டாமல், நமது பங்களிப்பை கொடுக்க வேண்டும்,'' என, ஈஷா யோகா மைய நிறுவனர் சத்குரு பேசினார்.

'நதிகளை மீட்போம், பாரதம் காப்போம்' இயக்க விழிப்புணர்வு பேரணி, கோவையில் நேற்று முன்தினம் துவங்கி, 16 மாநிலங்கள் வழியாக, 7,000 கி.மீ., கடந்து, அக்.,2ல் டில்லியை அடைகிறது. பேரணியை முன்னின்று நடத்தி, சத்குரு வாகனத்தை ஓட்டிச் செல்கிறார். இப்பேரணி, நேற்று மதுரை காந்தி மியூசியம் வந்தது.

சத்குரு பேசியதாவது:

அபிக்ஷா என்ற, 8 வயது சிறுமி, தான் இதுவரை நதியையே பார்த்ததில்லை. கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கியதையும் பார்த்ததில்லை என, பேசியது வேதனைக்கு உரியது.

சித்திரை திருவிழாவில், கள்ளழகர் வற்றாத வைகை ஆற்றில், இறங்குவதை அனைவரும் பார்க்க வேண்டும்.

அதற்கான முயற்சியை இப்போதே எடுக்கும் போது, பலன், 15 முதல்,

## மதுரையில் சத்குரு உருக்கம்

20 ஆண்டுகளில் கிடைக்கும். இந்த உன்னத இயக்கத்திற்கு ஆதரவு தெரிவிக்க, 80009 80009 என்ற எண்ணுக்கு, 'மிஸ்டு கால்' கொடுத்து இணையுங்கள்.

மதுரையில், வைகை ஆற்றை கடந்த போது, மனம் வேதனை அடைந்தது. அவ்வளவு அசுத்தமாக இருக்கிறது. இது ஆறா? இது, யார் செய்த தவறு? அமைச்சர், கலெக்டர் என, அடுத்தவரை கை காட்டாமல், நம் பங்களிப்பை கொடுக்க வேண்டும்.



சத்குரு

இன்று, நம் மண் மற்றும் நதிகளின் வளத்தை மீட்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இதற்கு அனைவரது பங்களிப்பும், ஈடுபாடும் அவசியம் தேவை. நீங்கள் தினமும் ஒருவருடன் ஒருவர், மூன்று நிமிடங்கள் இதைப்பற்றி பேச வேண்டும். இரவு உண்ணும் முன், நமக்காக உணவு விளைவிக்க முடியாமல், துாக்கிட்டு கொள்ளும் விவசாயிகளை, 20 வினாடிகள் நினைவு கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

கலெக்டர் வீரராகவ ராவ், மண்டல பாஸ்போஸ்ட் அலுவலர் மணீஸ்வர் ராஜா, பேராசிரியர் கு.ஞானசம்பந்தம், கூட்டுறவு அமைச்சர் ராஜூ, எழுத்தாளர் ஜெயமோகன் உட்பட பலர் கலந்து கொண்டனர். பேரணி நேற்று மாலை, கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரா சென்றது.

## ஆர்.எல். இன்ஸ்டிடியூட்டிற்கு விருது

'நதிகளை மீட்போம் பாரதம் காப்போம்' குறித்து பள்ளி, கல்லுாரி மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, கோவை ஈஷா யோகா மையம் சார்பில் கட்டுரை, ஓவியம், குறும்படப்போட்டிகள் நடத்தப்பட்டன. குறும்பட போட்டியில், மதுரை சுப்பலட்சுமி லட்சுமிபதி அறிவியல் கல்லுாரி, முதல் பரிசை பெற்றது. ஓவியப் போட்டியில், மதுரை ஆர்.எல். இன்ஸ்டிடியூட் ஆப் நாட்டிக்கல் சயின்ஸ், இரண்டாம் இடம் பெற்றது.